**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 67/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. முத்து |
| Husband/Father Name | மணி |
| Village /Area | காட்டுபாக்கம் |
| Taluk | வேலூர் |
| Occupation | கூலி |
| Age | 36 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.02.2026.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த பாஸ்கரன் எனது அண்ணன் முறை. அ.த.சா.1 எனது அண்ணன் ஆவார். அ.த.சா.2 எனது பெரியம்மா ஆவார். அ.த.சா.3 எனது மைத்துனர் ஆவார். அ.த.சா.4 எனது அண்ணன் முறை ஆவார். 08.11.2016 ம் தேதி புதூர் பெருமாள் ஏரி பக்கமாக நான் சென்று கொண்டிருக்கும் போது பாஸ்கரனை பார்த்தேன். அவருடன் ராமு என்ற ஐயரும் மணி என்ற மணிகண்டனும் உடனிருந்தார்கள். அப்போது நான் பாஸ்கரனை பார்த்து எதற்காக இங்கு இருக்கிறாய் என்று கேட்டேன். அதற்கு பாஸ்கரன் நான் சும்மா தான் வந்தேன் இப்போது கிளம்பி விடுவேன் என்று கூறினார். நான் வீட்டுக்கு வந்து விட்டேன். மறுநாள் காலையில் என் அண்ணன் முரளி போன் செய்து பாஸ்கரனை காணவில்லை நீ எங்கேயாவது பார்த்தாயா என்று கேட்டார். அப்போது நான் புதூர் பெருமாள் ஏரி பக்கமாக பாஸ்கர் மற்றும் ராமு, மணிகண்டன் மூவரையும் பார்த்தேன் என்று கூறினேன். போன் செய்த எனது அண்ணனிடம் எங்கேயாவது 2 நாள் தேடி பார் என்றும் பிறகு புகார் கொடுக்கலாம் என்று கூறினேன். 12.11.2016ம் தேதி மணி என்ற மணிகண்டனும் ராமு என்ற ஐயரும் பாஸ்கரனை அடித்து போட்டுவிட்டதாக பேசிக் கொண்டிருந்ததை சுமதி காதில் கேள்விபட்டு அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்கு சென்று முரளி மற்றும் சுமதி உறவினர்கள் சென்று அவர்கள் சொன்ன இடமான புதூர் பெருமாள் ஏரி பக்கம் சென்று தேடிய போது பாஸ்கரன் இறந்து கிடந்தார். அவரின் உடல் அழுகிய நிலையில் இருந்தது. அவரின் உடலில் பின் தலையிலும் முகங்களிலும் மற்றும் உடலில்

ஆங்காங்கே காயங்கள் காணப்பட்டன. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில்  குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.19 19:06:08 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.